දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/05-03/03/2019

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2020.07.31

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 (I)

அமைச்சு செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

**<u>அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள "உடன் முன்னரான ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலம்" தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்தம் செய்தல்</u>**

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 பிரகாரம் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பின்வரும் உதாரணங்களில் உள்ளவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு, அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் இங்கு குறிப்பிடப்படும் பணிப்புரைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் போது ஏதேனும் தெளிவின்மை ஏற்படுமிடத்து அது தொடர்பில் தெளிவைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**1. உதாரணம் 01**

அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தலையிடா முறையின் கீழ் 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்திய பின்னர் உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் உள்ள போது முதலாவது அட்டவணையின் கீழ் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தரொருவரது ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கான பதவி உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தினங்கள் பதவி உயர்வுக்கான ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின் குற்றம் இழைக்கப்பட்ட தினத்திற்கு அமைய பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நியமனத் திகதி | 2010.01.02 | 2010.01.02 | 2010.01.02 |
| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2014.05.20 | 2017.05.20 | 2019.05.20 |
| 10 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |
| 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி (நடைமுறை ஒழுங்கு விதிகள் 186 (ii) பிரகாரம் மூன்று வருட சேவைக் காலத்தை திருப்திகரமான சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது நீக்குவதற்கு அமைய) | 2023.01.02 | 2023.01.02 | 2023.01.02 |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2023.01.02 | 2023.01.02 | 2023.01.02 |

வழங்கப்பட்டுள்ள தண்டனையின் தன்மைக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட பதவி உயர்வுத் திகதி 2023.01.02 ஆம் திகதிக்குப் பின்னர் அமையும் திகதியாக இருத்தல் வேண்டும்.

உதாரணங்கள் :-

- சம்பள ஏற்றங்கள் மூன்றுக்கு மேல் சம்பள ஏற்றங்கள் பின்போடப்பட்டுள்ள ஒழுக்காற்றுத் தண்டனையொன்று விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 186 (ii) பிரகாரம் சம்பள ஏற்றங்கள் பின்போடப்படும் காலப்பிரிவு திருப்திகரமான சேவைக் காலத்திற்குள் கணக்கிடப்படாத காரணத்தினால் உத்தியோகத்தரின் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலப் பிரிவை நீக்குதல் வேண்டும்.
- ஏதேனும் குறிப்பிட்ட காலம் வரை பதவி உயர்வை பின்போடுவதற்கு ஒழுக்காற்றுத் தண்டனையொன்று விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த ஒழுக்காற்றுத் தண்டனை நிறைவடையும் திகதி வரையில் பதவி உயர்வு வழங்க முடியாமை.

2. உதாரணம் 02 :-

அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தலையிடா முறையின் கீழ் 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்திய பின்னர் உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் உள்ள போது இரண்டாவது அட்டவணையின் கீழ் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தரொருவரது ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கான பதவி உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தினங்கள் பதவி

உயர்வுக்கான ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின் குற்றம் இழைக்கப்பட்ட தினத்திற்கு அமைய பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நியமனத் திகதி | 2010.01.02 | 2010.01.02 | 2010.01.02 |
| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2014.05.20 | 2017.05.20 | 2019.05.20 |
| 10 வருட செயலூாக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |
| 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி (நடைமுறை ஒழுங்கு விதிகள் 186 (ii) பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தை திருப்திகரமான சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது நீக்குவதற்கு அமைய) | 2021.01.02 | 2021.01.02 | 2021.01.02 |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2021.01.02 | 2021.01.02 | 2021.01.02 |

**3. உதாரணம் 03 :-**

அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தலையிடா முறையின் கீழ் 10 வருட செயலூாக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்திய பின்னர் உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் உள்ள போது சுருக்க ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தரொருவரது ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கான பதவி உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தினங்கள் பதவி உயர்வுக்கான ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின் குற்றம் இழைக்கப்பட்ட தினத்திற்கு அமைய பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நியமனத் திகதி | 2010.01.02 | 2010.01.02 | 2010.01.02 |
| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2014.05.20 | 2017.05.20 | 2019.05.20 |
| 10 வருட செயலூாக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |

| | | | |
|---|---|---|---|
| 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி (நடைமுறை ஒழுங்கு விதிகள் 186 (ii) பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தை திருப்திகரமான சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது நீக்குவதற்கு அமைய) | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |

4. உதாரணம் 04 :-

அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தலையிடா முறையின் கீழ் 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்திய பின்னர் உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் உள்ள போது ஒழுக்காற்றுக் காரணி அல்லாத ஒரு விடயத்திற்காக சம்பள ஏற்றங்கள் பின்போடப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவரது ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கான பதவி உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தினங்கள் பதவி உயர்வுக்கான ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின் குற்றம் இழைக்கப்பட்ட தினத்திற்கு அமைய பின்வருமாறு அமைதல் வேண்டும்.

உதா : வினைத்திறன்காண் தடைதாண்டலை உரிய திகதியில் பூரணப்படுத்தாத காரணத்தினால் உத்தியோகத்தர் ஒருவரின் சம்பள ஏற்றம் பின்போடப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில்,

| | | | |
|---|---|---|---|
| நியமனத் திகதி | 2010.01.02 | 2010.01.02 | 2010.01.02 |
| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2013.01.02 ஆம் திகதி முதல் 2014.01.01 வரை | 2016.07.02 முதல் 2017.07.01 வரை | 2019.07.02 முதல் 2020.07.01 வரை |
| சம்பள ஏற்றம் பின்போடப்பட்டுள்ள சேவைக் காலம் | 01 வருடம் | 01 வருடம் | 01 வருடம் |
| 10 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி | 2020.01.02 | 2020.01.02 | 2020.01.02 |
| 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி (நடைமுறை ஒழுங்கு விதிகள் 186(ii) பிரகாரம் சம்பள ஏற்றம் பின்போடப்பட்டுள்ள காலப்பிரிவொன்றை | 2021.01.02 | 2021.01.02 | 2021.01.02 |

| | | | |
|---|---|---|---|
| திருப்திகரமான சேவைக் காலத்தை கணக்கிடும் போது நீக்குவதற்கு அமைய) | | | |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2021.01.02 | 2021.01.02 | 2021.01.02 |

**5. உதாரணம் 05**

ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தரொருவர் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பு அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெறுவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் திகதி பின்வருமாறு.

| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2019.05.20 | 2019.05.20 | 2019.05.20 |
|---|---|---|---|
| குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பட்டுள்ள முறை | முதலாவது அட்டவணையின் கீழ் | இரண்டாவது அட்டவணையின் கீழ் | சுருக்க ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அமைய |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2024.05.20 | 2021.05.20 | 2020.05.20 |
| அதற்கிணங்க, பதவி உயர்வு அல்லது ஆட்சேர்ப்புக்காக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் காலப் பிரிவு. | 2019.05.20 முதல் 2024.05.20 வரை | 2019.05.20 முதல் 2021.05.20 வரை | 2019.05.20 முதல் 2020.05.20 வரை |

**6. உதாரணம் 06**

தகைமைகளைப் பரீட்சிக்கும் தினத்திற்குப் பின்னர் ஆயினும், பதவி உயர்வு நடைமுறைப்படுத்தப்படும் தினத்திற்கு முன்னர் புரியப்பட்ட குற்றமொன்று தொடர்பில் ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தரொருவர் / குற்றப்பத்திரமொன்று

வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவர், ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறமை பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பு அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வுப் பெறுவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் திகதி பின்வருமாறு.

| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2019.05.20 | 2019.05.20 | 2019.05.20 |
|---|---|---|---|
| குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பட்டுள்ள முறை | முதலாவது அட்டவணையின் கீழ் | இரண்டாவது அட்டவணையின் கீழ் | சுருக்க ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அமைய |
| தகைமைப் பரிசீலிக்கப்படும் திகதி | 2020.01.01 | 2020.01.01 | 2020.01.01 |
| ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வு நடைமுறைக்கு வரும் திகதி | 2020.08.15 | 202.08.15 | 2020.08.15 |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் இறுதித் தீர்மானமொன்று வழங்கப்படும் வரையில் பதவி உயர்வு அல்லது நியமனம் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்துதல் வேண்டும். | | |
| ஒழுக்காற்று விசாரணையின் இறுதியில் ஒழுக்காற்றுத் தண்டனையொன்று வழங்கப்பட்டிருப்பின் | பதவி உயர்வு அல்லது ஆட்சேர்ப்புக்கு தகைமைப் பெறமாட்டார். | | |

7. உதாரணம் 07

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 நடைமுறைப்படுத்தப்படும் 2020 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்பு உடன்முன்னரான ஐந்து வருட (05) திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்ய வேண்டிய தேவைப்பாட்டைத் தவிர ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களின் தலையிடா தர அடிப்படையிலான பதவி உயர்வுக்கான தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்குவதற்கு நியமன அதிகாரி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதற்கிணங்க, அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தலையிடா முறையின் கீழ் 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூரணப்படுத்திய பின்னர் உயர் தரமொன்றுக்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்கு முடியுமான சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தரொருவரின் ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கான பதவி உயர்வுத் திகதிகள் பதவி உயர்வுக்கான ஏனைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருப்பின் குற்றமிழைக்கப்பட்ட திகதிக்கு அமைய அது பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| நியமனத் திகதி | 2006.01.01 | 2006.01.01 | 2006.01.01 |
| குற்றம் இழைக்கப்பட்ட திகதி | 2015.05.20 | 2015.05.20 | 2015.05.20 |
| குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள முறை | முதலாவது அட்டவணையின் கீழ் | இரண்டாவது அட்டவணையின் கீழ் | சுருக்க ஒழுக்காற்று நடைமுறைக்கு அமைய |
| 10 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி | 2016.01.01 | 2016.01.01 | 2017.01.01 |
| 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தும் திகதி(நடைமுறை ஒழுங்கு விதிகள் 186 (ii) பிரகாரம் மூன்று வருட சேவைக் காலத்தை திருப்திகரமான சேவைக் காலத்தைக் கணக்கிடும் போது நீக்குவதற்கு அமைய) | 2019.01.01<br>**** | 2017.01.01 | 2017.01.01 |
| அ.சே.ஆ. சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பதவி உயர்வுக்கு தகைமையைப் பூர்த்திசெய்யும் திகதி (ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்திருப்பின்) | 2020.01.01 | 2020.01.01 | 2020.01.01 |

***** 03 சம்பள ஏற்றங்களை விட குறைந்த சம்பள ஏற்றங்கள் பின்போடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம். வழங்கப்பட்டுள்ள தண்டனையின் தன்மைக்கு ஏற்ப உதாரணம் 01 குறிப்பின் கீழ் உள்ளபடி பதவி உயர்வுக்கு தகைமைப் பெறும் திகதி மாற்றமடையலாம்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.